பார்க்கவேண்டியிருக்கிறது. ஆகவே, அதையும் எண்ணிப் பார்த்து இதுபற்றி அரசாங்கம் தக்கதொரு முடிவை உரிய நோத்தில் எடுக்கும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பெண் கைதிகளை அழைத்துச் செல்வதற்கும், பெண் கைதிகளை விசாரணை செய்வதற்கும், பெண் போலீஸ் படை அமைக்க வேண்டும் என்று ஒரு திட்டம் இருந்ததே, அது இப்பொழுது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா? அல்லது பரிசீலிக்கப் பட்டு கைவிடப்பட்டதா? பரிட்சார்த்தமாக அதைச் செயல் படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பரீட்சார்த்தமாகச் செயல் படுத்த அரசுக்கு இப்பொழுது எந்த உத்தேசமும் இல்லை.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையில் நீண்ட நெடுங்காலமாக, முஸ்லீம்களைச் சேர்ப்பது என்பது இல்லாத நிலை இருந்து வருகிற காரணத்தால் புதிய நிய மனங்களில் முஸ்லீம்களுக்கு இடம் தர அரசு அனுமதிக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** காவல் துறையில் முஸ்லீம் களும் இருக்கிறார்கள்.

* 130 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a special officer was appointed to go into the demands of the Ministerial staff association of the Tamil Nadu Police Department;

(*b*) whether he submitted his report;

(*c*) what his recommendations are; and

(*d*) whether the Government propose to implement his recommendations?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** (அ) மாவட்டக் காவல் துறை அலுவலகங்கள், சென்னை மாநகரக் காவல் துறை அலுவலகம் ஆகியவற்றின் அமைப்புபற்றி ஆய்வுசெய்து அவற்றின் மேம் பாட்டிற்கான கருத்துரை நல்குவதற்கென சிறப்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார்.

(இ) ஆம்.

(உ) & (எ) பேரவைமுன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

**திரு. கே. விநயகம்:** சார், இந்த விஷயத்தைப் பொறுத்தவரை யிலும், இதுபற்றி ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு தனி அதிகாரி போட்டார்கள் என்று சொல்லப்படுகிற இந்த நேரத்தில், யாராவது சட்டசபை அங்கத்தினர்கூட இந்தக் குழுவில் சேர்ந்து இதை விசாரித்தார்களா? அதற்கென்று வேறு ஏதாவது ஸ்தாபனம்

---

* 249–260ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

*1970 பிப்ரவரி 28]*

இருக்கிறதா? உயர்திரு. ம. பொ. சி. அவர்கள்கூட இதிலே இருக்கிறார் என்று செய்தி வந்ததே, அது இந்தக் குழுவா? அல்லது வேறு குழுவா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது குழு அல்ல. சிறப்பு அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டார் என்பதிலிருந்தே இது குழு அல்ல என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன். போலீஸ் கமிஷன் என்பது வேறு. அதில்தான் திரு. ம. பொ.சி. அவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** காவல் துறையில் இருக்கும் பணியாளர்களுக்கும் போலீஸ்காரர்களுக்கும் 1923-ம் ஆண்டிலிருந்து தினப்படி ரூ. 1-25 என்றே இருந்து வருகிறது. அதை உயர்த்துவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** போலீஸ் கமிஷனுடைய அறிக்கைக்குப்பிறகு எல்லாவற்றையும்பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. கே. விநாயகம் :** இப்பொழுது செய்யப்பட்டிருக்கிற சிபார்சுகளின் விளைவாக, ஏற்கனவே இருக்கிற செலவைவிட அரசாங்கத்திற்குக் கூடுதல் செலவு ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதற்கான விவரம் இல்லை.

**திரு. கே. சகாதேவக் கவுண்டர் :** போலீஸ்காரர்களுக்குக் கொடுக்கப்படும் தினப்படி ரூ. 1.25 என்று இருக்கிறது. இதுவும் மாவட்டந்தோறும் மாறுபட்டதாக இருக்கிறது. மேலும், மாதம் முப்பது நாட்களும் 'டூர்' சென்றால் 20 நாட்களுக்குத்தான் பாட்டா கொடுக்கப்படுகிறது, மற்ற பத்து நாட்களுக்கு பாட்டா கொடுக்கப்படவில்லை என்ற புகார் இருக்கிறதே, அது உண்மையா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அது புகார் என்று கேள்வியிலேயே கூறுகிறார்கள். உண்மையாக இருக்குமானால், அதை எழுதியனுப்பினால், கவனிக்கப்படும்.

### கீழக்கரையில் கைப்பற்றப்பட்ட கள்ள நோட்டுகள்

■ **131 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

19--9--1968 வாக்கில் இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் 10 ரூபாய் பிரிவில் கள்ள நோட்டுகள் கைப்பற்றப்பட்டனவா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, அது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? அத்துடன், நம்முடைய பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் கொலை பாதகச் செயலைச்